1973 நவம்பர் 22]

சுருட்டுத் தொழிலாளர்களுக்கு ஊதியம்.

*241 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுதுமுள்ள சுருட்டு தொழிலாளர்களுக்கு ஒரே சீரான கூலி வழங்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு கூலியை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை சமர்ப்பித்து அதனை ஆணையாக ஜூன் 1973-ல் அரசு உத்திரவிட்டுள்ளது. 1973 ஜூலை முதல் நாளிலிருந்து அக்குறைந்த பட்ச கூலி அமுலில் இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இப்போது கூட கும்பகோணத்தில் ஒரு கூலியும், நாகப்பட்டினத்தில் ஒரு கூலியும், மாயூரத்தில் ஒரு கூலியும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட அறிக்கைகள் ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

Provident Fund, etc., benefits for workers in beedi industry

*242 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the States Labour Ministers' Conference held at Mysore in 1972 has recommended for the introduction of Provident Fund, Gratuity and Employees State Insurance benefits to the beedi workers; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இது இந்திய அரசு சம்பந்தப்பட்டதாகும். இது குறித்த பரிவுரைகள் இந்திய அரசிற்கே செய்யப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த கிராச்சுட்டி, பிராவிடன்ட் பண்டு போன்ற வசதிகள் உடனடியாக பீடித் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில்—மத்திய அரசாங்கத்தைப் பொறுத்ததாக இருந்தாலும்—இங்கேயே ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த பிராவிடன்ட் பண்டு, கிராச்சுட்டி போன்றவைகளின் சட்ட திட்டங்கள் பூராவும் மத்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நடைமுறையின்படி இப்போது காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதிலே நாமும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, இரண்டுவிதமான சட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டாம் என்று கருதி, மத்திய அரசின் நடைமுறைகளை நாமும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, நாட்டிலே உள்ள ஏனையத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் இந்தப் பீடித் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை. பீடித் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயத்தை அரசாங்கம் செய்திருக்கிறது. அதில் கூட ஒழுங்கான முறையில் விதிகள் பின்பற்றப்படவில்லை. ஒப்பந்தக்காரர்கள்தான் அந்தச் சலுகைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். பீடி சுத்தக்கூடியவர்களுக்குச் சலுகைகள் கிடைக்க வசதியில்லாமலிருக்கிறது. ஆகவே தொழிலாளர்களுக்கு நேரடியாக சலுகைகள் கிடைக்க ஒரு விசேஷ சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒப்பந்தக்காரர்கள் இடையீடு அதிகமாக இல்லை என்று தான் நான் கருதுகிறேன். சமீபத்தில் ராணிப்பேட்டையில் பீடித் தொழிலாளர்களைச் சந்திக்கப்போனபோது ஒப்பந்தக்காரர்கள் இடையீடு அவ்வளவாக இல்லை என்று தெரிவித்தார்கள். மற்ற மாநிலங்களிலே இருப்பதாகத் தெரிகிறது. தமிழகத்தில் நாம் இரண்டுமுறை

1973 நவம்பர் 22]

கூலியை உயர்த்தியிருக்கிறோம். அந்தக் கூலி உயர்வு எல்லாத் தொழிலாளர்களுக்கும் நல்ல நிம்மதியைத் தருகிறது என்று நான் கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், மத்திய அரசாங்கம் இந்தச் சலுகையைச் செய்யவேண்டுமென்று இருந்தாலும் தமிழ்நாட்டிலே பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகள் உடனடியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? போடப்பட்ட சட்டமும் சரியாக அமுல் படுத்தப் படவில்லை. அதை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களின் நிலைமை நல்லமுறையில் சீரடைந்திருக்கிறது. அதோடு சென்றமுறை மைசூரில் நடைபெற்ற மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஒன்றன்பின் ஒன்றாக நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, மற்ற மாநிலங்களை விட—குறிப்பாக ஆந்திராவை விட தமிழகத்தில் பீடித் தொழிலாளர் களின் நிலைமை சிறப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கிராச்சுட்டி, பிராவிடன்ட் பண்டு போன்ற வசதிகளைச் செய்வதற்கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருந்தாலும் இந்த பீடித் தொழிலாளர்களுக்கு இத்தகைய சலுகைகளை செய்துகொடுப்பதற் கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறதா? இதற்கு முன்னதாக போனஸ் ஆக்டைத் திருத்துவதற்கு மாநில அரசு ஒரு தீர்மானத்தை போட்டு அனுப்பியது. அதைப்போல ஒரு தீர்மானத்தை இந்த சட்டமன்றத்திலே நிறைவேற்றி, பீடித் தொழிலாளர்களுக்கு இந்த நன்மைகள் கிடைக்க ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பீடித் தொழிலாளர்களுக்கு அகில இந்திய மட்டத்தில் பல சலுகைகள் அளிக்கப்பட வேண்டு மென்பதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது.

[1973 நவம்பர் 22

திரு. கே. எ. வகாப்: பீடித் தொழிலாளர்களுக்கு நம்முடைய மாநிலத்தைவிட பிற மாநிலங்களில் கூலி குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறவர்கள் பீடித் தொழிலை பக்கத்து மாநிலங்களுக்கு மாற்றுகின்ற அபாயம் இருக்கிறது. ஆகவே, அண்டை மாநிலங்களை கலந்துபேசி, எல்லா தொழிலாளர்களுக்கும் உயர்ந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்ய மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற கூலியை உயர்த்த வேண்டுமென்று நாம் சொல்லி யிருக்கிறோம். இந்தப் பொறுப்பை வகிக்கின்ற மத்திய அமைச்சர் ஆந்திராவைச் சேர்ந்தவர். அவர்கள் இதில் அக்கறை கொண்டிருப் பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: அமைச்சரவர்கள் கூலி விஷயங் களைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது ஆயிரம் பீடிக்கு ஆண் தொழிலாளிக்கு 4 ரூபாய், பெண் தொழிலாளிக்கு 2 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் கோரியது ஆயிரம் பீடிக்கு ஆண் தொழிலாளிக்கு 5½ ரூபாய், பெண் தொழிலாளிக்கு 3 ரூபாய் என்பது. ஆனால் சர்க்கார் நிர்ணயித்த கூலி ஆயிரம் பீடிக்கு ஆண் தொழிலாளிக்கு 3¼ ரூபாய், பெண் தொழிலாளிக்கு ஒன்றே முக்கால் ரூபாய் என்பது. ஆகவே, இந்தக் கூலி எந்த அடிப் படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? மாநிலம் பூராவிலும் கூலி வழங்குவதில் வேறுபாடுகள் இருக்கின்றன. எல்லா இடங் களிலும் ஒரே கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நான் ஏற்கெனவே சொன்னதுபோல இந்த கூலி நிர்ணயம் இரண்டுமுறை உயர்த்தப் பட்டிருக்கிறது. அந்த வகையிலே நாம் மற்ற மாநிலங்களை விட, திரு. ஜப்பார் அவர்கள் சொன்னது போல ஒப்பந்தக்காரர் களுக்குத்தான் சலுகைகள் போய்ச் சேருகின்றன என்றல்லாமல் நம்முடைய மாநிலத்தில் தொழிலாளர்களுக்கே சலுகைகள் கிடைக்கின்றன. இரண்டு முறை கூலி உயர்வளித்தபோதும் குழு ஆராய்ந்து முடிவு செய்த பின்னால்தான் அது செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஆகவே, இதில் குறைபாடுகள் இருக்காது என்று கருதுகிறேன்.